



# By Roy Posner

## (கதைச் சுருக்கம் – தமிழில்)

# பொருளடக்கம்


1. பயணங்கள் ....................................................................3

2. Excalibur மென்பொருள் ....................................................10

3. ஒரு புதிய விடியல் ...........................................................16

# 1. பயணங்கள்

சான் பிரான்சிஸ்கோ நகரின் விரிகுடா பகுதியில், ஒரு பிரகாசமான மதிய வேளையிலே, கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்த அவரை, ஓர் அம்மையார் சந்தித்தார். முதல் சந்திப்பு என்ற போதிலும், அந்த அம்மையார் நெடுநாள் பழகியவரைப் போல அவரிடம் பேச ஆரம்பித்து தமது பல அனுபவங்களை அவருடன் பகிர்ந்து கொண்டார். அந்த அம்மையார் ஒருநாள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதன் நடுவில் அவருக்கு ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கும், அந்த தொலைபேசி அழைப்பிற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதாக அவர் கருதினார். பல மாதங்கள் கழித்து, அவர் அதே தொலைக்காட்சித் தொடரைப் பார்க்க நேர்ந்த பொழுது, அதே நபரிடமிருந்து அவருக்கு மீண்டும் தொலைபேசி அழைப்பு வந்தது. மேலும் அந்த தொலைபேசி அழைப்பில் அவர் கூறிய ஒரு நபருடைய பெயரும், தொலைக்காட்சித் தொடரில் நடித்துக் கொண்டிருந்த ஒரு நபருடைய பெயரும் ஒத்துப் போனது அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இவ்வாறாக, அந்த அம்மையார் தான் கண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியையும், அதில் அவர் அதிசயமாக எதிர்கொண்ட ஒருங்கிணைவு (synchronicity) நிகழ்வுகளையும் கடற்கரையில் சந்தித்த அவரிடம் ஆச்சரியத்துடன் விளக்கினார்.

அந்த அம்மையார் கூறுவதை ஆர்வத்துடன் கூர்ந்து கேட்ட அவருக்கு, 25 வருடங்களுக்கு முன்பு அவர் ஏதன்ஸ் நகரத்திற்கு சென்றிருந்த சமயத்தில், கிரீஸ் நாடு ஜனநாயகம் அடைந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும், அதைத் தொடர்ந்து அக்ரோபோலிஸ் மலைச்சரிவில் சந்தித்த வித்தியாசமான, விந்தையான நிகழ்வுகளின் ஞாபகங்களையும் அது கிளறிவிட்டது. அந்த அம்மையாரிடம் அவர் அந்நினைவுகளைப்

பகிர்ந்து கொண்டார். சிறிது நேரம் கழித்து, அவர்கள் பிரிந்து செல்லும் முன், தன் கைப்பையைத் திறந்த அம்மையார், "Growth Online" என்னும் வலைத்தளத்திற்கான முகவரியை அவருக்குக் கொடுத்து, அதில் சராசரி வாழ்க்கையைத் தாண்டி, வாழ்விற்கான அர்த்தம், இலட்சியம், நோக்கம் என்ன? என்பன போன்ற பல, எளிதில் விடையிறுக்க முடியாத கேள்விகளுக்கு அதில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது எனக் கூறினார். உண்மையில், அவரின் ஆழ்மனத் தேடலுக்கான வழிகாட்டுதலைப் போல, எங்கிருந்தோ வந்த அந்த அம்மையாரைச் சந்தித்ததும், Growth Online வலைத்தளம் பற்றி அறிந்து கொண்டதும் அமைந்திருந்தன.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர், அந்த மனிதருக்கு தொழில் நிமித்தமாக, ஒரு வலைத்தளம் உருவாக்குவது தொடர்பான வேலைக்காக பாரிஸ் (Paris) செல்ல வேண்டியிருந்தது. அப்பயணத்தின் போது, திடீரெனச் சந்தித்த அம்மையாரில் தொடங்கி, Growth Online போன்ற பல நிகழ்வுகளை அவரது மனம் அசை போட்டுக் கொண்டே இருந்தது. முப்பது வருடங்களுக்கு முன், அவருடைய கல்லூரியில் படித்த ஜேஸன் லாம்பியர் (Jason Lambier) என்பவர் அந்த வணிக வாய்ப்புக்காக அவரை அழைத்திருந்தார். அவரைச் சந்திப்பதற்காகத்தான் அவர் பாரிஸுக்கு பயணப்பட்டுக் கொண்டிருந்தார். ஜேஸனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியிருந்த அவருக்கு, முதல் சந்திப்பில் ஜேஸன் “தான் கடவுளைக் கண்டிருக்கிறேன்!” எனக் கூறியிருந்தது, குறிப்பாக ஞாபகம் வந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், பாரிஸில் அவர்கள் இருவரும் சந்தித்த மறுகணம், தங்கள் குடும்பத்தைப் பற்றியோ, வேலையைப் பற்றியோ, அனுபவங்களைப் பற்றியோ விசாரிக்காமல், நேரடியாக கடவுளைக் கண்டது தொடர்பான விஷயங்களைப் பற்றி பேச ஆரம்பித்தனர்.

Wizard of Oz என்னும் கதையில் வரும் டோரதி (Dorathy) என்னும் கதாபாத்திரம், கடவுளைக் காணும் தேடலில் ஈடுபட்டிருப்பதாகத் தான் உணர்ந்ததைக் கூறிய ஜேஸன், மேலும் கூற ஆரம்பித்தார். டோரதி, பல்வேறாகப் பிரிந்திருந்த தன் ஜீவனின் பல பகுதிகளை (உடல், உணர்வு, மனம்) எவ்வாறு இணைப்பது என்ற தேடலில் ஈடுபட்டிருந்ததையும், அதில் அவர் எவ்வாறு வெற்றி பெற்றார் என்பதையும், மேலும் அது எவ்வாறு பகவான் ஸ்ரீ அரவிந்தரின் இலட்சியமான "விழிப்புணர்வுடன் பரிணாமம்" (Conscious Evolution) என்னும் கொள்கைக்கு இணையானது என்பதையும் மிகுந்த

ஆர்வத்தோடு ஜேஸன் அவருக்கு விவரிக்கலானார். டோரதியின் கதையில் ஒன்றிய ஜேஸன், ஒரு கட்டத்தில் டோரதியைப் போல் தானும் கடவுளுடன் பேசியதை உணர்ந்ததாகக் கூறினார். அத்தகைய உத்வேகமான, துடிப்பான ஜேஸனின் விளக்கத்தைக் கேட்ட அவர் பிரமிப்புடன் அமர்ந்திருந்தார். அவர்களின் கலந்துரையாடலின் இறுதியில், அவர் முன்னர் சந்தித்த அந்த அம்மையார் கொடுத்த "Growth Online" வலைத்தள முகவரியை ஜேஸனிடம் கொடுத்து அதைப்பற்றி எதுவும் தெரியுமா எனக் கேட்டவுடன், ஜேஸன் புன்முறுவலுடன் அது “தங்களுடைய ஒரு வலைத்தளம்!” எனக்கூறி அவரை மேலும் ஆச்சரியப்படுத்தினார். அதன் பின்னர், அந்த வலைத்தள வேலையைப் பற்றி ஜேஸன் அவரிடம் கோடிட்டுக் காண்பித்தாலும், முழு விவரங்களையும் இந்தியா சென்று அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

அவருடைய அடுத்த பயணம் இந்தியா. அமெரிக்காவில் சிலிகான் பள்ளத்தாக்கு போன்று, இந்தியாவில் கணினித்துறைக்குப் பெயர் போன பெங்களூர் நகரத்திற்கு அவர் வந்தடைந்தார். விமான நிலையத்திலிருந்து அவரை வரவேற்ற சதீஷ் சந்திரசேகரன், தங்கள் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றார். அவர்களுக்குள் நடந்த கலந்துரையாடலில், அவர்கள் Idea Hatcher என்னும் நிறுவனத்துடன் இணைந்து இணையம் சம்பந்தப்பட்ட பல்வேறு வேலைகளை, முதல் யோசனையில் தொடங்கி, முழுவதும் உருவாக்கி, நடைமுறைப்படுத்துவது போன்ற பல பிரிவுகளில் பணியாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் ஜேஸன் கூறிய யோசனையின்படி, அவர்கள் ஒரு புதிய, மர்மமான கணினி மென்பொருள் தயாரிக்கும் புராஜெக்டில் ஈடுபட்டிருப்பதாகக் கூறி, அத்திட்டம் எவ்வாறு உருவானது போன்ற பின்னணி விஷயங்களை சதீஷ் அவருக்கு விளக்கினார். அடுத்து அவர் கூறியதுதான் ஆச்சரியமூட்டுவதாகவும், நம்ப முடியாததாகவும் இருந்தது. அதாவது ஒவ்வொரு முறையும் அந்த மென்பொருளை அவர்கள் இயக்கும் பொழுது, அவர்கள் நினைத்தே பார்த்திராத இடத்திலிருந்து பல்வேறு நல்ல நேர்மறை விஷயங்கள் வருவதாகக் கூறிய சதீஷ், அது தொடர்பாக நடந்த நான்கு வெவ்வேறு ஒருங்கிணைவு நிகழ்வுகளை விளக்கினார். மேலும் அவர், அந்நிகழ்வுகள் அனைத்தும் தான் ஏற்கெனவே Growth Online வலைத்தளத்தில் படித்த வாழ்வின் மறுமொழி (Life Response) அனுபவங்களுக்கு இணையானதெனத் தெரிவித்தார். வாழ்வின் மறுமொழி தத்துவத்தின்

முக்கிய கோட்பாடென்பது, ஒருவர் தன்னுடைய எதிர்மறை நோக்கத்திலிருந்து மாறும் பொழுதோ, அல்லது தான் விருப்பமின்றி இருத்தலிலிருந்து மாறி ஆர்வத்துடன் ஒரு செயலைச் செய்யும் பொழுதோ, வாழ்வு எங்கிருந்தோ செயல்பட்டு அவருக்கு நல்ல விளைவுகளைக் கொடுக்கும் என விளக்கினார்.

அதே நேரத்தில் அவருக்கு வேறுவிதமான அனுபவங்களும் இருந்தன. ஒருநாள் அவர் சில காரணங்களினால் மிகவும் கோபமாகவும், படபடப்பாகவும் இருந்தார். அதே மனநிலையோடு அவர் அந்த மென்பொருளை இயக்கிய பொழுது, அவருக்கு முன்பு போல் நேர்மறை அனுபவங்கள் ஏதும் நிகழவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த அவருக்கு முன்பு நடந்த நேர்மறை சம்பவங்கள் தற்செயலாக நடந்ததுதானோ, அதற்கும் அந்த மென்பொருளுக்கும் சம்பந்தம் இல்லையோ என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தின. இத்தகைய பல்வேறு விதமான அனுபவங்களையும், தகவல்களையும் சதீஷிடம் இருந்து கேட்ட அவருக்கு மிகவும் வியப்பாகவும், புதிராகவும் இருந்தது.

அதன் பின்னர், அவர் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணித்தார். ஒரு நாள் அவர் கெய்ரோ நகரத்தில் Giza பிரமிடுகளை ரசித்துக் கொண்டிருந்தார். அங்கு அவர் பிரான்சின் அல்பாஸா (Francine Alfassa) என்னும் பயண வழிகாட்டியை (tour guide) சந்தித்து அவருடன் பேசலானார். தற்பொழுது அவர் ஈடுபட்டிருக்கும் புராஜெக்டைப் பற்றி முழுவதுமாக அறியாவிட்டாலும், மனித ஜீவியத்தின் அறிவை ஒன்றிணைப்பது தொடர்பான ஒரு திட்டத்தில் தான் பணியாற்றிக் கொண்டிருப்பதாக அவர் அப்பெண்மணியிடம் கூறினார். மேலும் அப்பெண்மணியிடம் Growth Online வலைத்தள முகவரியைக் கொடுத்த அவர், அதில் எளிதில் விளக்க இயலாத பல கேள்விகளுக்கு, விடையிருப்பதாகத் தெரிவித்தார்.

அவரைச் சுற்றி ஒரு நல்ல சூழல் இருப்பதை உணர்ந்ததாகத் தெரிவித்த அப்பெண்மணி, தன்னைப் பற்றியும் அவருக்கு எடுத்துரைக்கத் துவங்கினார். அவர் மனித ஜீவியத்தைப் பற்றிய புரட்சிகரமான எண்ணங்கள் கொண்ட பல பெண்மணிகள் சேர்ந்த ஓர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருப்பதாகவும், மேலும் அவர்கள் அதை உலகம் முழுவதும் பரப்பி வருவதாகவும் தெரிவித்தார். அவர்கள் மனித ஜீவியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருவதாகவும், அதன் பரிணாம வளர்ச்சி மூலம் நோய் மற்றும்

மரணத்தைக் கூட வெல்ல வாய்ப்பிருப்பதாகக் கூறினார். இந்தியாவில் ஓர் அம்மையார் மேற்கூறிய விஷயங்களில் மிகவும் முன்னோடியென்றும், மேலும் அவர் இந்த இலட்சியத்தின் கடைசி முயற்சியாக, ஆன்மீக சக்தியைக் கொண்டு உடல் அணுக்களை திருவுருமாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

அந்த அம்மையாரைப் போல ஒரு சித்தியடைந்த ஆன்மா தாங்கள் இல்லையென்றாலும், அந்த அம்மையாரைக் காட்டிலும் அவர்கள் மிகவும் பின்தங்கியிருந்த போதிலும், அவர்கள் இதுவரை வந்த வழி மிக அற்புதமானது எனத் தெரிவித்தார். மேலும் அத்தகைய உயர்ந்த இலட்சியத்திற்கு முன்பு, அவர்கள் தங்களைப் பல வழிகளில் தயார் செய்ய வேண்டியுள்ளது. உதாரணமாக, அகந்தையை அழித்தல், எதிர்மறை நோக்கங்களை, பழக்கங்களைக் கைவிடுதல் போன்ற முயற்சிகளே, முறையான அடித்தளமிட்டு, உயர்ந்த இலட்சியப் பாதைக்கு உறுதுணையாக அழைத்துச் செல்லக் கூடியவை. அம்முயற்சியில் பல படிகள் தாண்டிய பின்னரே, இறுதியில் மிகவும் கடினமான யோகப்பயிற்சியான உடல் திருவுருமாற்றம் இருக்கிறது. மேலும் அந்தப் பெண்மணி, Growth Online வலைத்தள முகவரியை உளமார ஏற்றுக் கொண்டு, நன்றி தெரிவித்ததோடு, தங்கள் ஆன்மீகப் பாதைக்கான தேடலில் அவை பெரும் பங்கு வகிக்கும் எனத் தெரிவித்தார்.

அந்த அம்மையார் கூறியதை மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்த அவர், சிறிது நேர இடைவெளிக்குப் பின், தான் சதீஷுடன் இணைந்து செயலாற்றும் திட்டத்தைப் பற்றி விளக்கத் தொடங்கினார். அவர்களுடைய சீரிய இலட்சியம் என்னவென்றால், மனிதகுல வளர்ச்சிக்கான அனைத்து அறிவையும் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, அனைவருக்கும், எந்நேரமும் கிடைக்கக் கூடிய வகையில் ஓர் உயர்ந்த மென்பொருளை (Expert System) உருவாக்க வேண்டும் என்பது. அந்த மென்பொருள் ஒரு மனிதனின், பலங்கள், பலவீனங்கள், திறமைகள், ஆற்றல்கள் போன்றவற்றை உடனுக்குடன் ஆராய்ந்து, எந்த ஒரு நேரத்திலும், வாழ்வைத் திறம் பட செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்கக் கூடியது. அதைச் செயல்படுத்துவதன் மூலம் ஒருவர் வாழ்வில் எந்நேரமும் அதிர்ஷ்டத்தை ஈர்க்கலாம். அத்திட்டத்தைப் பற்றிய குறிப்பான விஷயங்கள் அவருக்குத் தெரியாவிட்டாலும், அந்த மென்பொருளின் பரிசோதனை வடிவம் உருவானவுடன் அப்பெண்மணிக்கு அனுப்புவதாகவும், பலர் அதை

பரிசோதனை செய்து பார்ப்பது அந்த மென்பொருளை செம்மையானதாக்கும் எனவும் கூறினார். அந்த யோசனையால் கவரப்பட்ட அப்பெண்மணி, அடுத்து வரும் திட்டங்களில் அவருடன் இணைந்து செயலாற்ற விரும்பினார். தன்னுடைய முகவரி தொடர்பான தகவல்களைக் கொடுத்த பின்னர், அப்பெண்மணி அவரைப் பிரிந்து சென்றார்.

இவ்வாறாக பல்வேறு நாடுகளுக்குச் சென்று, பலவித அனுபவங்களைக் கண்ட பின்னர் தன்னுடைய சொந்த நகரான சான் பிரான்சிஸ்கோ திரும்பிய அவருக்கு மிகவும் பரபரப்பான மனநிலையும், அதே நேரத்தில் சிறிது குழப்பமாகவும் இருந்தது. ஜேஸன் ஏற்கனவே இத்திட்டத்தில் பல நாடுகளுக்குப் பயணிக்க வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். அடுத்து வந்த பல நாட்களுக்கு, அடுக்கடுக்காய் நடந்த பல அதிசய நிகழ்வுகளையும், தான் சந்தித்த பல்வேறு மனிதர்களைப் பற்றியும் அவர் மனம் அசை போட்டுக் கொண்டே இருந்தது. அவர் எவ்வளவு தீவிரமாக யோசித்தும், அந்நிகழ்வுகளுக்குப் பின்னாலிருந்த ஒருங்கிணைந்த, பூரண காரணத்தை அவரால் அறிய இயலவில்லை. அதன் பின்னர், அவர் அதை அப்படியே விட்டுவிட்டு, வாழ்வே அதன் நிதர்சனத்தை தெளிவு படுத்தும் என முடிவு செய்தார்.

அது கிறிஸ்துமஸ் காலமானதால், அவருக்கும் ஓய்வு தேவைப்பட்டதால், சூசனை அழைத்துக் கொண்டு கடைவீதிக்கு கிளம்பினார். அவர்கள் மும்முரமாக பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த வேளையில், எதிர்பாராவிதமாக ஓர் அம்மையாருடன் அவர் மோத நேரிடவே, யாரென்று பார்த்தால், சில காலங்களுக்கு முன்பு, அவர் சந்தித்த, இக்கதையைத் துவங்கி வைத்த அதே அம்மையார்! பின்னர் மூவரும் ஓரிடத்தில் அமர்ந்து கலந்துரையாட ஆரம்பித்தனர். அவர்கள் முதல் சந்திப்பிற்குப் பின் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் அவர் சுவைபட அந்த அம்மையாருக்கு விளக்கினார். ஆர்வமுடன் அவர் கூறுவதைக் கேட்ட அந்த அம்மையாருக்கு தானே அந்த அனுபவங்களையெல்லாம் கண்டதைப் போல, அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. இறுதியில் பிரிந்து செல்லும் முன், இம்முறையும் அவரின் சந்திப்பு ஆச்சரியத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. தனக்கு ஒரு மகள் இருப்பதாகவும், அவள் பாதி அமெரிக்க இனத்தையும், பாதி சீன இனத்தைச் சேர்ந்தவளென்றும், மேலும் பிரான்சின் கூறிய அந்த சகோதரத்துவ இயக்கத்தில் அவர் மகளும் பங்கு கொண்டிருப்பதாக அந்த அம்மையார் கூறியவுடன் அவர் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

அதைத் தொடர்ந்த ஆறு வாரத்திற்குப் பின், அவர்களின் சந்திப்பைப் பற்றிய நினைவு வரும் நேரம், அவர் மீண்டும் ஏதன்ஸ் நகரத்திலிருந்தார். ஆம்! ஜேஸன் அவரையும், அந்த மென்பொருள் தொடர்பாக அனைவரையும் கலந்து விவாதிப்பதற்காக ஏதன்ஸ் நகரிலுள்ள அக்ரோபோலிஸுக்கு அழைத்திருந்தார். இருப்பினும், அவருக்குத் தான் தொடர்ச்சியாக நடந்த வெவ்வேறு ஒருங்கிணைவு நிகழ்வுகளுக்கும், அந்த மென்பொருள் திட்டத்தில் அவருடைய தீர்க்கமான பங்கு எது எனவும் அந்த நிமிடம் வரை தெளிவாகப் புரியவில்லை.

***

# 2. Excalibur மென்பொருள்

சான் பிரான்சிஸ்கோவில் உள்ள மசோனிக் கலையரங்கம். அங்கு தான் Excalibur மென்பொருளின் பரிசோதனை வெளியீட்டிற்கான விழா ஏற்பாடாகியிருந்தது. பொது மக்களும், பத்திரிக்கையாளர்களும், ஊடகத்தை சார்ந்தவர்களும் பெருமளவில் கூடியிருந்தனர். Oz.Com நிறுவனத்தின் கனவு மென்பொருள், Excalibur-இன் ஜீவியத்தைத் தழுவியது என அனைவரும் அறிந்திருந்ததால் பலத்த எதிர்பார்ப்பு அங்கே நிலவியது. அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, சதீஷ் மடிக்கணினி போன்ற ஒரு பொருளுடன் மேடையேறினார். அவர் தங்கள் மென்பொருளை அறிமுகப்படுத்திய பின்பு, Excalibur-இன் மகிமையை விளக்கும் வகையில், "நீங்கள் ஓர் அதிசயத்தைக் காண்பீர்கள்!" என்று பார்வையாளர்களுக்கு உறுதியளித்ததோடு, அது என்னவென்று அவருக்கே தெரியாது என்று கூறி ஆச்சரியமூட்டினார்.

அவர் தங்கள் நிறுவனத்தை அறிமுகப்படுத்திவிட்டு, அந்த மென்பொருளின் தொழில்நுட்ப சிறப்பம்சத்தை விளக்கினார். அதன் பின்னர் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த மென்பொருளின் பரிசோதனை ஓட்டம். பின்னர் அவர் அந்த கணினியைப் பார்த்துக் கொண்டு, தன் ஒலிபெருக்கியில் பேசியவாறே அந்த மென்பொருளில் உள்ளே நுழைய அனுமதி கேட்டார். அந்த மென்பொருள் அனுமதி மறுத்தது. அடுத்து ஒரு முறை அவர் முயற்சிக்க, ஒருவிதமான இசை அக்கணினியில் இருந்து வந்தது. அதன்பின் ஒரே அமைதி. பார்வையாளர்கள் மத்தியில் பலத்த சிரிப்பொலி எழுந்தது. சதீஷுக்கு என்ன நடக்கிறது எனப் புரியாமல் குழம்பினார்.

அடுத்த நடந்த ஒரு விஷயம் அனைவரையும் பிரமிக்கவைப்பதாக இருந்தது. திடீரென ஓர் இளம்பெண் அந்த கலையரங்கின் பின்னிருந்த திரைச்சீலையைக் விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தார். அத்தகைய மிகப்பெரிய கூட்டத்தை சற்றும் எதிர்பார்த்திராத அப்பெண் தாங்கவொண்ணா அதிர்ச்சியும், கூச்சமும் அடைந்தார். யாருக்கும், ஒன்றும் விளங்கவில்லை. அப்பெண்ணும், சதீஷும் மேடையை விட்டுக் கீழிறங்க முற்படும் பொழுது, பார்வையாளர்கள் மத்தியிலிருந்து ஒருவர் திடீரென குரல் கொடுத்தார். "இப்பொழுது நடந்ததில் தவறொன்றுமில்லை! நாமனைவரும்

எதிர்பார்த்திருந்ததற்கான விடைதான் அப்பெண்! அப்பெண் Excalibur மகிமையால் வாழ்வின் எதிரொலியாக வந்தவர். எனக்கு அப்பெண்ணைத் தெரியும், அவர் மிகச்சிறந்த ஒரு சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்தவர்!" என உரத்த குரலில் கூறினார்.

அந்த மசோனிக் கலையரங்க விசித்திரமான நிகழ்ச்சிக்குப் பின்னர், அவரும், சதீஷும் இந்தியா நோக்கிப் புறப்பட்டனர். அந்த கலையரங்க அதிர்ச்சியிலிருந்து சதீஷ் முழுவதுமாக மீளவில்லை. அந்த நிகழ்ச்சி ஊடகங்களில் வெகுவாக விமர்சிக்கப்பட்டது, மக்களிடையே வேறுபட்ட பல அபிப்ராயங்கள் இருந்தன. அவருக்கு அந்த மென்பொருளின் code எழுதியவர்களைக் கண்டு அதன் பின்னுள்ள மர்மத்தை அறிந்து கொள்ள மிக ஆவலாக இருந்தது.

Oz.Com நிறுவனத்திற்குள் நுழைந்தவுடன் முதல் வேலையாக அவர் முகமது (Muhammad) என்ற மென்பொருள் code எழுதுபவரைக் கண்டு Excalibur மென்பொருளைப் பற்றி விசாரிக்கலானார். முகமது அவருக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கினார். அந்த மென்பொருள் ஒருவித மின்னதிர்வு மூலம் யாரந்த மென்பொருளுக்குள் உள்நுழைந்திருக்கிறார்களோ, அவர்களைப் பெரும்பாலும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஆழ்மனப் பிரச்சினையைக் கண்டறிந்து விடும். பின்னர் அந்தப் பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட அலைவரிசையாக மாற்றி, இணையத்தின் வழி அந்த மென்பொருளுக்குள் சென்றுவிடும். அந்த மென்பொருளின் தலைமைப்பகுதியாகிய Excalibur அதை ஆராய்ந்து, தனது அறிவுக்களஞ்சியத்தைத் தேடி, அதிலிருந்து பொருத்தமான ஒரு பதிலை/வழிமுறையைத் தேர்ந்தெடுத்து, அது மீண்டும் ஒரு மின்னதிர்வு வழியாக அந்த நபரின் ஆழ்மனதிற்குள் சென்றுவிடும். அந்த மின்னதிர்வு அல்லது சக்தி அந்தப் பிரச்சினைக்குக் காரணமாயிருந்த எதிர்மறைத் தன்மையை சரி செய்கிறது. அதன்மூலம் அது எங்கிருந்தோ வாழ்வின் நேர்மறை பலனை ஈர்க்கிறது. அந்த மென்பொருளின் வேலை சரியான பதிலனுப்பி, ஆழ்மனப் பிரச்சினையை சரி செய்வதோடு முடிந்து விடுகிறது. ஆனால், அதன் பின்னர், அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் வாழ்வின் மறுமொழி செயல்பட்டு அதிசயிக்கத்தக்க நிகழ்வுகளை ஈர்ப்பது யாரும் எதிர்பாராதது என அவர் சொல்லி முடித்தார்.

மேலும் முகமது, தான் Growth Online வலைத்தளத்திற்கு பலமுறை சென்று, வாழ்வின் மறுமொழி பற்றி அறிந்து, அதனால் நிஜ வாழ்விலும் அத்தகைய நேர்மறை விளைவுகளை ஈர்த்ததாகக் கூறினார். ஆனால், Excalibur மென்பொருளில் அத்தகைய நிகழ்வுகள் தானாகவே, மனிதர்களின் எவ்வித முயற்சியுமின்றி நடப்பது மிகவும் ஆச்சரியமளிப்பதாகக் கூறினார். உடனே அந்த நபரும், முகமதுவைப் பார்த்து, அப்படி Excalibur மென்பொருள் மூலம் ஒருவர் ஆழ்மனதில் ஏற்படும் மாற்றங்கள் நன்னெறியைச் (ethical) சார்ந்தனவா என வினவினார். அதற்கு முகமதுவும் சிரித்துக்கொண்டே, வாழ்வின் மறுமொழி பற்றிய தொழில் நுட்பம் உலகத்திற்கு புதிதாகையால் அதைப்பற்றிய விதிகளோ, வரைமுறைகளோ இதுவரை இல்லை எனத் தெரிவித்தார். அப்பதிலால் முழுத் திருப்தி அடையாத அவருக்கு ஓர் இயந்திரம் மூலம் மனிதனுக்குள் மாற்றங்கள் நிகழ்ந்து, அதனால் வரும் விளைவுகள் ஏற்புடையவையாக இல்லை.

மேற்கொண்டு ஏதும் வாதாடாமல், அவர்கள் இருவரும் மென்பொருள் இருக்கும் இடத்திற்குச் சென்றனர். அம்மனிதர் அந்த மென்பொருளை தானே சோதித்துப் பார்க்க விரும்பினார். எனினும் அந்நேரம் அது இயங்கு நிலையில் இல்லாததால் ஒன்றும் புதிதாக நிகழவில்லை. மேலும் அவர், ஆர்வ மிகுதியால், அந்த Excalibur மென்பொருளின் மூல அறிவாக இருந்து செயல்படுவது யாதென வினவினார். அதற்கு அந்த மென்பொறியாளர் முகமது, ஜேஸனின் அறிவுரைப்படி ஒருவர் அந்த விஷயத்தை அறிந்து கொள்வதற்கு முன்பாக, வாழ்வின் மறுமொழி பற்றிய விவரங்களைப் புரிந்து கொண்டு, அதை தன் வாழ்வில் செயல் படுத்திப் பார்த்திருக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து வந்த பல நாட்களுக்கு அவர் சீரிய முயற்சி எடுக்க வேண்டுமென முடிவு செய்ததோடு மட்டுமின்றி, Growth Online வலைத்தளத்திற்கு சென்று வாழ்வின் மறுமொழி பற்றிய விவரங்களைக் கவனமுடன் படிக்க ஆரம்பித்தார். சிறிது சிறிதாக, அவருடைய எதிர்மறைப் பழக்க வழக்கங்களுக்கும், அதற்கேற்ற வாழ்வில் பிரதிபலிக்கும் எதிர்மறைச் சூழ்நிலைகளுக்குமான தொடர்பை அவரால் உணர முடிந்தது. மேலும், வாழ்வின் மறுமொழியின் முக்கிய அம்சமான அகம்-புறத் தொடர்பு (Inner Outer Correspondence) பற்றி அவர் அறிந்து கொண்டது, வாழ்வைப் பற்றி இதுவரை இல்லாத புதிய கோணத்தை, புதிய புரிந்துணர்தலைக் கொடுத்தது.

ஒருநாள் அவர், தன்னுடைய வாழ்வைப் பற்றி இதுவரை அறிந்த கருத்துக்களோடு ஆழ்ந்து பொருத்திப் பார்க்க விரும்பினார். அவர் தான் ஏன் ஜேஸனுடன் இணைந்து, சுமுகமாகப் பணியாற்றாமல், அவர் கொடுத்த புராஜெக்டில் சீரிய முயற்சி எடுக்காமல், ஒருவித ஒட்டுதலின்றி, பொறுப்பின்றியிருக்கிறோம் என ஆழ்ந்து யோசிக்கலானார். அவ்வாறு யோசிக்கும் பொழுது, தான் ஆரம்பத்திலிருந்தே அத்திட்டத்தில் ஜேஸனுடன் இணைந்து பணியாற்றுவதை விரும்பவில்லையென்பதை உணர்ந்தார். எந்தவித வெளிக்காரணங்கள் இல்லையென்றாலும், பின் ஏன் அந்தத் தயக்கம்?, அவருக்குப் புரியவில்லை. தனக்குள்ளே ஆழ்ந்து, உள் சென்ற அவர், அங்கிருந்து இறைசக்தியை அழைத்து, தன்னுடைய பிரச்சினைக்கு தீர்வு தரும்படி வேண்டினார். அதைத் தொடர்ந்து ஒரு தவத்தைப் போல, அமைதியான, ஆழ்நிலைக்குச் சென்ற அவர், அத்தியான நிலையிலேயே அரைமணி நேரம் ஆழ்ந்திருந்தார். அவர் அமைதியாகக் கண் விழித்தவுடன், அவருக்கு திடீரென ஒரு நினைவு வந்து நிலைமையைப் பளிச்சென விளக்கியது. ஆம்! முப்பது வருடங்களுக்கு முன்பு, கல்லூரியில் படித்த காலத்தில் ஜேஸனுடன் ஏற்பட்ட ஒரு கருத்து வேறுபாடு இன்னும் முடிக்கப்படாமல், நிரடலான நினைவாக இருந்தது. அதுதான் நிகழ்காலத்தில் இணைந்து செயலாற்ற விடாமல் தடையை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது.

அவர் பழைய நினைவுகளில் மூழ்கிச்சென்று, அந்நினைவுகளை விழிப்புடன் புரிந்துணர முயற்சி செய்துகொண்டிருந்த வேளையில், தொலைபேசி மணி ஒலித்தது. மறுமுனையில் சூசன். சமீப காலமாகத் தொடர்பிலில்லாத, அவர்களின் நீண்ட நாள் வாடிக்கையாளரான Arcadia Constructions நிறுவனத்திடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. மேலும் அந்நிறுவனத்திடமிருந்து அவர்கள் செய்த வேலைக்கான ஒரு பெரிய தொகை வராமல் நிலுவையிலேயே இருந்தது. அவர் சூசனை, அக்கடிதத்தைப் பிரித்துப் பார்க்கச் சொன்னவுடன், சூசனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதில் அவர்களுக்கு வரவேண்டிய தொகையான 7 மில்லியன் டாலருக்கான காசோலை அதிலிருந்தது! அதைக் கேட்டு, சூசனுக்கு இணையாக, அவரும் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

சிறிது நாட்களில் சான் பிரான்சிஸ்கோ திரும்பிய அவர், உடனடியாக வீட்டிற்குச் சென்று, காசோலையைக் கையில் எடுத்துக் கொண்டு மாயாஜாலம் போன்று நடந்த

நிகழ்வுகளை மீண்டும் நினைவு கூர்ந்தார். அவருடைய மனமாற்றமும், ஜேஸனுடன் இனி இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற தீர்க்கமான முடிவும், எங்கிருந்தோ செயல்பட்டு, வாழ்வின் மறுமொழியாக அவருக்கான காசோலை அந்நேரத்தில் வந்தடைந்திருந்தது. அப்பொழுது அவருக்கு Excalibur மென்பொருள் அறிமுக விழாவில் நடந்த அந்த விசித்திர நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. Excalibur செயல்பாட்டினால் அப்பெண் அந்நேரத்தில் அங்கு ஈர்க்கப்பட்டாள் என்பது அவருக்கு விளங்கியது. யாருடைய அகம் அதற்கு காரணமாக இருந்திருக்கும் என யோசித்துக் கொண்டிருந்தவருக்குத் திடீரென அது விளங்கியது. அவர் வாழ்வில் எதையோ தேடிக்கொண்டிருந்த பொழுது, அவர் எதிர்பாராவிதமாக சந்தித்தது அப்பெண்ணின் தாயாரை. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளே Excalibur மென்பொருள் அறிமுக விழா வரைக்குமான காரணம். அங்கு அவர் எதிர்பாராவிதமாக சந்தித்தது அப்பெண்ணை. அவ்வாறெனில் அவரின் நினைவுகளும், முந்தைய தொடர்புகளுமே அப்பெண்ணை அங்கு ஈர்த்திருந்தன என்றாகிறது. எனினும், அனைத்து சம்பவங்களையும் இணைத்து வாழ்வு என்ன சொல்ல விரும்புகிறது என அவருக்குப் புரியவில்லை. அவர் வாழ்வின் போக்கிலேயே அது தெரியட்டும் என விட்டுவிட்டார். எனினும் வாழ்வு அதை வெளிப்படுத்தாமல் விடுவதாக இல்லை!

அவர் எண்ணத்திற்கு விடை கொடுத்து, கணினியை அடைந்த பொழுது, அங்கே அவர் எகிப்தில் சந்தித்த பிரான்சின், காணொலி அழைப்பில் (video call) காத்துக் கொண்டிருந்தார். Growth Online வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியதற்காக அவருக்கு நெகிழ்ந்து நன்றி கூறிய பிரான்சின், அதன் மூலம் தான் மிகவும் பயனடைந்திருப்பதாகக் கூறினார். அவர்களும் ஜேஸனின் மென்பொருளான Excalibur-ஐ பரிசோதனை செய்து பார்த்து அதில் தேவையான சில யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகவும் கூறினார். Excalibur மென்பொருள் நன்னெறி முறையில் ஒருவரது ஆழ்மனதை மாற்றி வாழ்வின் மறுமொழியை ஈர்க்கிறதா, அத்தகைய மாற்றங்கள் நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா போன்ற அவருக்கிருந்த சந்தேகங்களை, பிரான்சினும் பகிர்ந்து கொண்டார். இருப்பினும், அத்தகைய தொழில்நுட்ப யோசனை மிகவும் புதுமையானதும், புதிரானதும், கவர்ச்சியானதுமாகும் எனத் தெரிவித்தார்.

Growth Online வலைத்தளத்தில் அவர்கள் அறிந்த அகம்-புறத் தொடர்புக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பட்டதாகவும், மேலும் அதை தினசரி வாழ்வில்

நடைமுறைப்படுத்தி வாழ்வின் மறுமொழி பற்றி, ஆழ்ந்து பயின்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். Growth Online, வாழ்வின் மறுமொழி, Excalibur பரிசோதனை என பலதரப்பட்ட வழியில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பது ஒரு புதிய ஜீவியத்தின் முன்னோடிகளாய் உணர்வதாகவும், மேலும் மனித குலத்தின் அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சிக்கான பாதை அதுவாகவிருக்கலாம் என மிகுந்த பரவசத்துடன் தெரிவித்தார். பிரான்சின் பேசி முடித்து, தொடர்பைத் துண்டித்த பின்னர், அம்மனிதருக்கு அனைத்தையும் இணைத்து ஏகப்பட்ட புரிதல் அந்நேரத்தில் தேவைப்பட்டது.

***

## 3. ஒரு புதிய விடியல்

அதன்பின் பல மாதங்கள் விரைந்து ஓடி விட்டன. அவரும் வேலையின் காரணமாகப் பல நாடுகளுக்கு ஓய்வின்றி பயணம் மேற்கொண்டிருந்தார். அவர்களது குழுவும் Excalibur வலைத்தள வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஒருநாள் அவர் அலுவலகத்தில் இருந்த பொழுது அவரைக் காண ஓர் இளம்பெண் வந்திருந்தாள். அப்பெண் வேறு யாருமில்லை. பல மாதங்களுக்கு முன்பு, Excalibur மென்பொருள் அறிமுக விழாவில் திரைச்சீலையைத் திடீரென விலக்கிக் கொண்டு உள் நுழைந்த பெலின்டா டாம் (Belinda Tam). அந்த நிகழ்விற்குப் பின் அவர் மீண்டும் அப்பெண்ணை இப்பொழுது தான் சந்திக்கிறார். அப்பெண் தன்னை "லிட்டி" (Liddy) என அழைக்குமாறு கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் அலுவலகத்தில் இருந்து கிளம்பி Bay Bridge, Golden Gate வழியாக நடந்து, இயற்கையை ரசித்தவாறே பேச ஆரம்பித்தனர். அவர் ஆர்வமுடன் அன்று மசோனிக் அரங்கில் என்ன நடந்தது என விசாரிக்க, அப்பெண்ணும் அன்று தான் வழி தவறி அந்த அரங்கத்திற்குள் வந்த நிகழ்வுகளை மிகவும் சுவராசியத்துடன் எடுத்துரைத்தாள். பின்னர் அவர் அப்பெண்ணின் சகோதரத்துவ இயக்கத்தின் ஈடுபாட்டைப் பற்றி விசாரித்தார். தான் அவ்வியக்கத்தில் இளம் உறுப்பினரானதால், மிகவும் உயர்ந்த இலட்சியங்களான உடலைத் திருவுருமாற்றுவது போன்றவற்றில் பங்கு கொள்ளாமல், வேறு சில வழிமுறைகளைப் பயின்று வருவதாக லிட்டி தெரிவித்தாள். அவற்றில் ஒன்று சமர்ப்பணம். அது மத வழிபாட்டையோ, சடங்கையோ சார்ந்தது அல்ல. அது ஓர் ஆன்மீக வழிமுறை. தன்னையே உவந்து உயர்சக்திகளுக்கு அளிக்கும் பொழுது, அது வாழ்வில் வியக்கத்தக்க மாற்றங்களைக் கொணர்வதாக அவள் தெரிவித்தாள். அதை அவள் ஓர் உதாரணத்துடன் எடுத்து விளக்கியது, அழகாக, அற்புதமாக இருந்தது.

அவள் நடத்திக் கொண்டிருக்கும் பயிற்சி வகுப்புகள் பெரும்பாலும் எந்த ஒரு சுவாராசியமுமின்றி இருக்கும். மாணவர்கள் தாமதமாக வருவார்கள் அல்லது பதிவு செய்த அனைவரும் வர மாட்டார்கள். அன்றொரு நாள் புதிய வகுப்பு தொடங்கும் முன்பு, அவள் தான் கற்ற சமர்ப்பணத்தின் பலனை அறிய விரும்பினாள். வகுப்பு தொடங்க சில

நிமிடங்களுக்கு முன்பாக, அமைதியாக, உள் சென்று, உயர்சக்தியான தெய்வீக அன்னைக்கு ஆழ்ந்து சமர்ப்பித்தாள். அதனால் மிகவும் நிம்மதி அமைந்ததுடன், அடுத்து வருவனவெல்லாம் அன்னையின் விருப்பம் எனப் புதிய நம்பிக்கை அவளுக்குள் பிறந்தது. அதன் பின்னர் அந்தப் பயிற்சி வகுப்பு நடந்த விதம் பிரம்மிக்கத்தக்கதாக இருந்தது. மாணவர்கள் அனைவரும் குறித்த நேரத்திற்கு வந்தனர். உற்சாகத்துடன் பங்கெடுத்தனர். லிட்டிக்கும் ஆரம்பத்திலிருந்த உற்சாகம், உத்வேகம், சக்தி வகுப்பின் இறுதி வரை அப்படியே இருந்தது. வெளியிலிருந்தும் எந்த வித தடங்கல்களும் இல்லை. அது அவளுக்கும், மாணவர்களுக்கும் ஓர் அற்புதமான, ஆச்சரியத்தக்க அனுபவமாக இருந்தது. அவள் சமர்ப்பணத்தின் சக்தியை முழுவதும் அறிந்து கொண்டாள். அது வாழ்வையும் சாதகமாகச் செயல்பட வைத்து, சூழ்நிலையையும் உயர்த்தி, அனைவருக்கும் ஆனந்த அனுபவத்தைக் கொடுத்தது. அன்று நடந்தது ஒரு மிக நேர்த்தியான பயிற்சி வகுப்பென சொல்லலாம். அவள் சுவராசியமாக எடுத்துரைத்ததை, அவரும் ஆர்வமுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

மேலும், அகம்-புறத் தொடர்பு, வாழ்வின் மறுமொழி, சமர்ப்பணம், போன்ற அனைத்து ஆன்மீக வழிகளையும் பயின்று வருவது ஓர் அற்புதமான அனுபவம் என அவள் தெரிவித்தாள். அதனால் அவளைப் போன்ற வேறு பலர் ஒரு குழுவாக, இயக்கமாக, உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு, உயர்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தி, உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடித்து, மனநிலையையும், ஜீவியத்தையும் உயர்த்தி, புது மனிதர்களாக வலம் வரத் தொடங்கினார்கள். ஒரு குறிப்பிட்ட மனித குலம், புதிய பரிணாமக் காலத்தில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்திருந்தது. ஒரு புதிய உலகம் உருவாகிக் கொண்டிருந்தது.

லிட்டி மனிதகுல வளர்ச்சியைப் பற்றிப் பேசியது அவர் இதயத்தில் எதிரொலித்துக்கொண்டேயிருந்தது. பூமியில் புதிய விடியல் பிறந்ததற்கான சாத்தியத்தை அவராலும் உணர முடிந்தது.

*****